DINAMALAR 31 DEC 2009



கோவை ஈஷா யோக மைய வளாகத்தில் உள்ள தியானலிங்கத்தை பாபா ராம்தேவ் தரிசித்தார்.

# பாபா ராம்தேவ் தியானலிங்க தரிசனம்

கோவை, டிச.31

பாபா ராம்தேவ் நேற்று கோவை வெள்ளியங் கிரிமலைச்சாரலில், ஈஷாயோக மைய வளாகத்தில் உள்ள தியானலிங்க கோவிலுக்கு வந்தார்.

ஈஷா யோக மையத்தில் கூடியிருந்த5ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈஷா தியான அன்பர்களுக்குஈஷாயோக மையநிறுவனர்ஜக்கிமற்றும் பாபாராம்தேவ்ஆகியோரின் சத்சங்கம் நடந்தது.

பாபா ராம்தேவை அறிமுகப்படுத்திசத்குருபேசும் போது, இந்தியா மற்றும் உலகில்ஒவ்வொருவீட்டிற்கும்யோகாகிடைக்கவேண்டும் என்பதில் ராம்தேவ் பெரும்பங்கு வகித்திருக்கிறார்என்றார்.பாபாராம்தேவ் பேசும்போது, நான் சிவனுடைய இருப்பிடமாகிய இமாலயத்திலிருந்து வருகிறேன். ஆனால் இங்கு வந்தபிறகு, இன்னுமொரு இமாலயத்திற்கு வந்ததாக உணர்கிறேன்.நான்யோகாசனப்பயிற்சிகளுடன்தனது ஆன்மீகப் பாதையை ஆரம்பித்தேன். பிறகு பிராணாயாமத்தைசேர்த்துக் கொண்டேன். பிராணாயாமம்என்வாழ்க்கையில் மாற்றங்களைக்கொண்டு வந்தது.ஆன்மீகப்பாதையில் நுழைபவர்களுக்கு உண்மையானகுருகிடைப்பது மிகவும் முக்கியம். இப்போது நீங்கள் ஈஷாவில் இருப்பது தற்செயலானதுஅல்ல.பலபிறவிகளிலானதொடர்புமற்றும் ஆன்மீகப்பயிற்சிகளுக்குப் பிறகே இது சாத்தியம் என்று குறிப்பிட்டார்.

பாபாராம்தேவ் அவர்கள் தியானலிங்க திருக்கோவில்வளாகத்திலுள்ள தீர்த்தக்குளத்தில் மூழ்கி எழுந்தார். தீர்த்தக்குளம் என்பது தீவிரசக்தியுடன் பிரதிஷ்டைசெய்யப்பட்ட ரசலிங்கத்துடன் கூடிய நீர்நிலை ஆகும்.

தியான லிங்கத்தில் அமர்வதற்கு முன்பாக இந்தநீர்நிலையில்மூழ்கி எழுவது,தியானலிங்கத்திடமிருந்து முறையாகஅதிர்வலைகளைப்பெறுவதற்குத்துணை செய்யும்.

பாபாராம்தேவ்ஈஷாவில் தனக்கேற்பட்ட அனுபவங்களைப்பகிர்ந்துகொள்ளும் போது, இங்குள்ள ஒவ்வொரு மனிதரிலும், ஒவ்வொருபொருளிலும் சிவனின் தன்மையைப் பார்க்கமுடிகிறது.இங்கு வந்ததற்கு பிறகு மிகவும் ஆழமானஆன்மீகரீதியான அமைதியை என்னுள் உணரமுடிகிறதுஎன்றார்.